ஊடக அறிவித்தல் இல. - 71

# தேர்தல் ஆணைக்குழு

## பாராளுமன்றத் தேர்தல் - 2020.08.05

## வெளிநாடுகளிலிருந்து வருகை தந்த தேருநர்கள் வாக்களிக்க வரும்போது கடவுச்சீட்டை எடுத்துவரும் தேவைப்பாடு

பாராளுமன்றத் தேர்தலின்போது அனைத்து வாக்காளர்களும் தமது வாக்கினையளிப்பதற்கு தமக்குரிய வாக்கெடுப்பு நிலையத்திற்குச் செல்லும்போது, கீழ்க் குறிப்பிடப்படும் ஆளடையாள ஆவணங்களிலொன்றை எடுததுச்செல்வது கட்டாயமானதென்பதோடு, வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்கெடுப்பு நிலைய அலுவலர்களுக்கு அதனைப் பரிசோதிப்பதற்குச் சமர்ப்பிப்பதும் அவசியமாகும்.

ஆளடையாள ஆவணங்கள்:

1. ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள தேசிய அடையாள அட்டை
2. செல்லுபடியான கடவுச்சீட்டு
3. செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்
4. அரசாங்க சேவை ஓய்வூதியர் அடையாள அட்டை (ஓய்வூதியத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட)
5. முதியோர் அடையாள அட்டை (பிரதேச செயலகத்தினால் வழங்கப்பட்ட)
6. ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள மதகுருமாருக்கான அடையாள அட்டை
7. தேர்தல் ஆணைக்குழுவினால் வழங்கப்படுகின்ற தற்காலிக அடையாள அட்டை
8. ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களத்தினால் வழங்கப்படுகின்ற புகைப்படத்துடன் கூடிய விசேட அனுமதிப்பத்திரம்

02. வெளிநாடுகளுக்குச் சென்றுள்ள நேருநர்கள் பற்றிய விபரங்களை கிராம அலுவலர்களிடமிருந்து பெறறுக்கொண்டு, அந்தத் தேருநர்களின் பெயர்களை வாக்கெடுப்பு நிலையத்திலுள்ள தேருநர் இடாப்பில் அடையாளமிடுவதற்கு அவசியமான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறான தேருநரொருவர், வாக்குச் சீட்டொன்றைக் கோரி வாக்கெடுப்பு நிலையத்திற்கு வரும் பட்சத்தில், அவரது ஆளடையாளம் பற்றி விசேடமாக விசாரித்தறிவதற்கு வாக்கெடுப்பு நிலைய அலுவலர்களுக்கு செயலாற்றுவதற்கு வசதியாக அமையும் பொருட்டே அவ்வாறு செய்யப்பட்டுள்ளது.

03. வெளிநாடுகளுக்குச் சென்றுள்ள தேருநர்களின் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளும் 2019 ஆம ஆண்டின் தேருநர் இடாப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வதிவிட முகவரிக்கு அஞ்சலிடப்பட்டுள்ளது. வெளிநாடுகளுக்குச் சென்றுள்ள, எனினும் இதுவரையில் நாடு திரும்பாத தேருநர்களின் தகவல்களின் உதவியுடன் அவ்வாறான ஆட்களின் வாக்கினையளிப்பதற்கு சூழ்ச்சிகரமான நுட்பமுறைகளாக போலி அடையாள அட்டைகள் தயாரிக்கப்படுவதாக இவ்வாணைக்குழுவிற்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

04. இவ்வாறான ஆள்மாறாட்ட வாககளிப்பு நடவடிக்கைகளைத் தடுப்பதற்கு வெளிநாடுகளுக்குச் சென்று திரும்பிய வாக்காளர்களுக்கு தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு தேசிய அடையாள அட்டைக்கு மேலதிகமாக தமது கடவுச்சீட்டை வாக்கெடுப்பு நிலையத்திற்கு எடுத்து வருமாறு அறிவுறுத்தல வழங்கப்படுகிறது.

05. இவ்வாறான வாக்காளரொருவருக்கு கடவுச்சீட்டைச் சமர்ப்பிக்க முடியாதிருக்கும் பட்சத்தில், வேறு செல்லுபடியான ஆளடையாள ஆவணமொன்றைச் சமரப்பித்தபோதும், அதற்கு மேலதிகமாக தமது ஆளடையாளத்திற்குரிய பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்திலுள்ள சம்பந்தப்பட்ட படிவத்திற்கேற்றதான வெளிப்படுத்தலொன்றையும் கட்டாயமாக சமர்ப்பிக்க நேரிடும்.

06. அவ்வாறான வெளிப்படுத்தலொன்றைச் செய்யாத வாக்காளரெவருக்கும வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்குச் சீட்டொன்று வழங்கப்பட மாட்டாது. அதேபோல், இத்தகைய வாக்காளரொருவரின் ஆளடையாளம் பற்றி சந்தேகம் எழுமாயின், ஆள்மாறாட்ட வாக்களிப்பதற்கு எத்தனித்த ஆளொருவராகக் கருதி மேலதிக விசாரணைக்காக அவ்வாக்காளரை பொலிஸாரிடம் ஒப்படைக்க நேரிடுமென்பதும் அறிவிக்கப்படுகிறது.

மஹிந்த தேசப்பிரிய
தவிசாளர், தேர்தல் ஆணைக்குழு
(தேர்தல் ஆணைக்குழு சார்பாக)

தேர்தல் ஆணைக்குழு
சரண மாவத்தை
இராஜகிரிய

2020.07.25